*4*

# கீழே தள்ளப்பட்டுள்ளோம், ஆனாலும் அழிக்கப்படவில்லை

## (2 கொரிந்தியர் 4:7-15)

*"இந்த மகத்துவமுள்ள வல்லமை ... , தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி ..." (4:7).*

பல ஆண்டுகளுக்கு முன்னர், எனது குடும்பத்தார்களும் நானும், லோவர் அருங்காட்சியகம் சென்று, உலகத்தின் மாபெரும் கலைப்பொக்கிஷங்களில் சிலவற்றைப் பார்த்து, வியந்து மெச்சிக் கொண்டிருந்தோம். அங்கிருந்த சித்திரங்களில் ஒன்றைச் சுற்றிக் கூடியிருந்த ஒரு கூட்டத்திடம் நாங்கள் வந்தோம். இந்தச் சித்திரம் ஒரு கண்ணாடி உறைக்குள் வைத்து மூடப்பட்டிருந்தது. அருகில் ஒரு காவலர் நின்றிருந்தார். அந்தச் சித்திரத்தைப் பார்க்கப் போதுமான அளவுக்கு நாங்கள் நெருங்கி வருகையில், அது புகழ்பெற்ற மோனா லிசாவின் சித்திரம் என்று நாங்கள் புரிந்துணர்ந்தோம். இந்த கெம்பீரமான அரையில் இருந்த பல கலைப் பொக்கிஷங்களில், இது விலைமதிப்பற்ற பொக்கிஷமாயிருந்தது. இது திருட்டு, திட்டமிட்டு அழித்தல் மற்றும் பாராட்டுபவர்கள் தொட்டுப் பார்த்தல் ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கப்பட்டிருந்தது. கண்ணாடிக்குப் பின்னால் வைக்கப்பட்ட அந்தப் பாதுகாப்பு, பதிலாக ஒன்றை வைக்கப்பட இயலாத கலைப் பணியைப் பாதுகாப்பதற்கு ஏற்புடைய ஒரே வழியாகக் காணப்பட்டது.

அருங்காட்சியகங்களின் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதற்கு அவற்றினால் மேற்கொள்ளப்பட்டிருந்த விரிவான முன்னெச்சரிக்கைகளை நான் அடிக்கடி கவனித்திருக்கிறேன். தத் என்ற அரசருடைய பொக்கிஷங்களைக் காண்பதற்குக் குவிந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள், அந்தக் கலை உண்மைகளைக் கண்ணாடி உறைகளுக்குப் பின்வைத்துப் பாதுகாக்கச் செய்யப்பட்டிருந்த முயற்சிகளைக் கண்டனர். யாரேனும் ஒருவரின் சிந்தனையற்ற செய்கையினால், மூவாயிரம் ஆண்டுகள் பழமையான பொக்கிஷங்கள் பாழாக்கப்படுவதற்கு, பொறுப்பு ஏற்கக்கூடிய எந்த ஒரு நபரும் அனுமதிக்கப்படமாட்டார். எங்குமுள்ள அருங்காட்சியகங்கள் எல்லாவற்றிலும், சித்திரங்கள் கண்ணாடி உறைகளுக்குள் வைத்துப் பாதுகாக்கப்படாதிருந்தால் அவைகள் தொடப்படும்போதெல் லாம் ஒலியெழுப்பும்படியான மின்னணுப் பாதுகாப்புக் கருவிகளால் பாதுகாக்கப்படுகின்றன. அருங்காட்சியகங்களில் அல்லது இல்லங்களில் உள்ள வகையான பொக்கிஷங்களுக்கும், விசேஷித்த கவனிப்பு அவசியமாகிறது, ஏனெனில் விலைமதிப்பற்ற ஒரு பொருளின் சீரழிவை உற்று நோக்குதல் என்பது துன்பகரமானதாக உள்ளது.

*இந்த உண்மையானது, 2 கொரிந்தியர் 4:7ல் பவுலின் வார்த்தைகளினுடைய அதிர்ச்சியளிக்கும் செயல் விளைவைக் கருத்தாகத் தெரிவிக்கிறது: "... இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்." பவுலின் நாட்களில் இருந்த மண்பாண்டமானது, அதிகசெலவில்லாத களிமண் பானையாக இருந்தது. கொரிந்து போன்ற பழங்கால நகரங்களில் அகழ்வை மேற்கொண்ட புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள், இந்தக் களிமண் பானைகள் மற்றும் ஜாடிகளின் ஆயிரக்கணக்கான துண்டுகளைக் கண்டறிந்துள்ளனர். "இயற்கையாகவே அழிபடக்கூடாத" இந்தப்பொருட்கள், அனேகமாக ஏராளமானவையாகவும் விலைமலிவானவையாகவும் இருந்தபடியால், மிகவும் அடிக்கடி பின்விட்டுச் செல்லப்பட்டிருந்தன. எண்ணற்ற இந்தத் துண்டுகள் செயல்விளக்கப்படுத்துகிறபடி, பானைகளும் ஜாடிகளும் குறிப்பாக எளிதில் உடையக் கூடியவையாக இருந்தன. அவைகள் உணவுப் பாத்திரங்கள் என்ற வகையில் பயன்நிறைந்தவையாக இருந்தன, ஆனால் எவரொருவரும் அவற்றில் ஒன்றிற்குள் ஒரு பொக்கிஷத்தை வைப்பதுபற்றி ஒருபோதும் சிந்தித்திருக்கமாட்டார். பொக்கிஷங்கள் என்பவை இயற்கையின் சக்திகள் அல்லது மனிதனின் பேராசைகள் ஆகியவற்றிற்கு எதிரான சிலவற்றிற்குரியவைகளாய் இருந்தன. இவ்வாறாகப் பவுல், "... இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" என்று கூறியபோது, அசாதாரணக் காட்சி ஒன்றை அவர் விவரித்துக்கொண்டிருந்தார்.*

## பொக்கிஷம்

*சுவிசேஷ ஊழியம் என்பதே "நாம் கொண்டுள்ள" பொக்கிஷமாக உள்ளது. நமது வசனப்பகுதியின் சந்தர்ப்பப் பொருளில், பவுல் "தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" என்ற ஒளியைப் பற்றிப் பேசியுள்ளார் (4:6). "ஒளி" என்பது, இயேசு கிறிஸ்துவே கர்த்தர் என்ற அறிவித்தலாக உள்ளது (4:5). பவுல் "நாம் கொண்டுள்ள" பொக்கிஷங்கள் பற்றிப் பேசுகிறதுபோது, இந்தப் பொக்கிஷம் நமக்குக் கொடுக்கப்பட்டு இருந்தது என்ற உண்மையின்மீது வலியுறுத்தம் வைக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் "கொண்டுள்ள" ஆசீர்வாதங்கள் பற்றி, அவர் பலமுறை பேசுகிறார் (3:4, 12; 4:1). ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர், இந்த ஆசீர்வாதங்கள் நமக்குக் கொடைகள் என்ற வகையில் வருகின்றன என்று கூறுகிறார். 4:1ல் அவர், "இப்படிப்பட்ட ஊழியத்தை உடையவர்களாகிய நாங்கள் இரக்கம்பெற்றிருப்பதால் ..." என்று கூறுகிறார். அவ்வாறே, தேவனுடைய பொக்கிஷமும் நம்முடையதாக உள்ளது, ஏனென்றால் அதைத் தேவன் நமது கரங்களில் வைத்தார்.*

*"பொக்கிஷம்" என்பது சுவிசேஷத்தின் நற்செய்திக்கு வேதாகமத்தில் உள்ள பிரியம்மிகுந்த ஒரு உருவகமாகும். ஒருமுறை இயேசு, "பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது" என்று கூறினார் (மத்தேயு 13:44). அவர் ஒரு இரட்டை உவமையைக் கூறினார், அதில் இராஜ்யம் "விலையுயர்ந்த ஒரு முத்து"டன் ஒப்பிடப்பட்டது (மத்தேயு 13:46). கிறிஸ்துவுக்குள் "ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" என்று பவுல் எழுதினார் (கொலோசெயர் 2:3). இந்த உருவகம் சுவிசேஷத்தைப் பற்றிய முக்கியமான உண்மையொன்றைத் தகவல்*

அறிவித்தபடியால் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது: சுவிசேஷத்தை எவரொருவரும் இலேசாக கருத இயலாதபடிக்கு, அப்படிப்பட்டது அசாதாரணமான மதிப்பீடு கொண்டுள்ளது. சுவிசேஷம் ஒரு பொக்கிஷத்துடன் ஒப்பிடப்பட்டது தற்செயலானதல்ல, அது மலிவான வேடிக்கைப் பொருளும் அல்ல. உவமையில் வரும் மனிதர், பொக்கிஷத்தையும் முத்தையும் கண்டறிந்தபோது, அவன் அந்த ஒரு விஷயத்தைக் கொண்டிருப்பதற்காகத் தனக்குள்ள எல்லாவற்றையும் விற்றான். இந்த உவமை, சுவிசேஷத்தின் எல்லை யற்ற மதிப்பைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. அதை நாம் கண்டுபிடிக்கும் போது, நாம் எல்லாவற்றையும் தியாகம் செய்ய மனவிருப்பமாக இருக்கக்கூடிய ஒரு பொக்கிஷத்தைக் கண்டறிகிறோம்.

கீரிஷ் நாட்டின் ஏதென்ஸ் நகரத்தில் உள்ள தேசீய அருங்காட்சியகத்தில் ட்ரேஜன் யுத்தம் பற்றிய புராணங்களின் காலகட்டமான கி.மு. பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பொன்னால் ஆன குறிப்பிடத்தக்க சில பொக்கிஷங்கள் உள்ளன. பத்தொன்பதாவது நூற்றாண்டின் பிற்பகுதி யில், ஹெய்ன்ரிச் ஸ்கைல்மான் என்பவர், அந்த நாயகத்துவ யுகத்தின் பழமை யான நினைவுச்சின்னம் எதையும் அவரால் ஒருக்காலும் கண்டுபிடிக்க இயலாது என்று திரும்பத் திரும்பக் கூறப்பட்டிருந்தபின்பு, இந்தப் பொக்கிஷங்களை அகழ்ந்தெடுத்தார். தாம் கண்டறியும் பொக்கிஷங்களின் நேர்த்தியான மதிப்பு பற்றி அவர் சிறிதளவே கருத்துக்கொண்டிருப்பினும், அந்தக் கருத்து அவரது வாழ்வின் பெருவிருப்பமாக இருந்தது. அவர் தாமே, அந்தப் புதைபொருள் கண்டுபிடிப்புகளுக்குப் பெரிய தொகை ஒன்றைச் செலவிட்டிருந்தார், ஏனெனில் அந்தக் கிரேக்கப் புதையலின் கனவு அவரைத் தூண்டிய அளவுக்கு வேறு எதுவும் அவரைத் தூண்டியிருக்கவில்லை.

நாம் யாவரும் ஒரு பொக்கிஷத்தைக் கொண்டுள்ளோம் என்று இயேசு அறிந்திருந்தார். களவாடப்படக்கூடிய அல்லது மோசம்போக்கப்படக்கூடிய பூமிக்குரிய பொக்கிஷத்தையோ அல்லது எவரொருவரும் எடுத்துச் சென்றுவிட இயலாத பரலோகத்தின் பொக்கிஷத்தையோ நாம் தேர்ந்து கொள்கிறோம். அவர், “உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்” என்று கூறினார் (மத்தேயு 6:21). கிறிஸ்துவுக்கான நமது ஊழியத்தில் நாம் “இந்தப் பொக்கிஷத்தைக் கொண்டிருக்கிறோம்” என்பதில் பவுல் உறுதி யாயிருந்தார்.

கிறிஸ்தவரின் கைகளில் ஒரு பொக்கிஷம் வைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளுதல் என்பது கிறிஸ்தவரின் அடையாளமாயிருக்கிறது. நமது ஊழியங்களில் இருந்து நாம் மிகக் கொஞ்சமானவற்றையே எதிர்பார்க்கிறோம் என்பதால், நமது ஊழியங்களைத் தீவிரமாக மேற்கொள்ளாதபடிக்குச் சோதனைகள் பலவற்றை நாம் நிலையாக எதிர்கொள்கிறோம். பல பணிப்பொறுப்புக்களைத் திரும்பத் திரும்பச் செய்தல் மற்றும் அவை கொண்டுள்ள தாழ்வான மதிப்பு ஆகியவை, ஊழியங்களை ஒரேவிதமான சலிப்பு மிகுந்த பணிகளாகத் திருப்புகிறது. ஒரு சில சபைக்குழுமங்களில் மாத்திரமே - மருத்துவ மனைகளுக்குச் செல்லுதல், துரதிர்ஷ்டவசமானவர்களைக் கவனித்தல், வீடுசந்திக்கும் குழுவுடன் ஊழியம் செய்தல் போன்ற - முக்கியமான ஊழியங்கள் மெதுவான மரணத்தில் சாகாதிருக்கின்றன. தொடக்கத்திற்குப் பின்பு உற்சாக மானது அடிக்கடி குறைந்து போய்விடுகிறது.

இந்த நடவடிக்கைகளில் நாம் ஒரு பொக்கிஷத்தைக் கொண்டுள்ளோம் என்ற நினைவூட்டுதல் பல நிகழ்வுகளில் குறைவுபடுகிறது. நமது ஊழியத்துடன் நமது பொக்கிஷம் இருக்குமென்றால், மற்ற வற்புறுத்துதல்கள் நமது முக்கியமான ஊழியங்களுக்குரிய உறுதிப்பாட்டைக் களவாட, நாம் நிச்சயமாக அனுமதிக்க மாட்டோம். நன்கு அறியப்பட்ட ஸ்காட்டிஷ் பிரசங்கியாரான ஜேம்ஸ் S. ஸ்டுவார்ட் என்பவர், ஏற்புடைய கேள்வியொன்றைக் கேட்டிருக்கிறார்: சபையின் சுவிசேஷ ஊழியத்துவத்திற்கு இன்றைய நாட்களில் சபைக்கு மிகவும் தேவைப்படுவது எது? அவரே இதற்குப் பின்வருமாறு பதில் அளிக்கிறார்:

> நவீனத் தொழில் நுட்பங்களில் அதிகமானவை, அதிகமாக புதுப்பிக்கப்பட்ட முறைமைகளாக, சபை வாழ்வின் அதிகம் தற்காலத்திய வடிவமைப்புகளாக, அதிகம் புதிதாக வெளிவந்த இயந்திரங்களாக உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அடிப்படைத் தேவை என்பது நிச்சயமாகப் பின்வருவதாகவே உள்ளது: நாம் கொண்டுள்ள ஐசுவரியங்கள் பற்றிய ஆழமான கருத்துணர்வு, இயற்கைக்கு மேலானதை அதிகம் உயிருள்ள வகையில் நமக்கு ஏற்புடையதாக்குதல், உயிர்த்தெழுந்த கர்த்தரில் உள்ள விசுவாசத்தை எப்போதும் நாம் முன்வைக்க ஏதுவான, புலன் உணர்வைக் கடந்த ஆதாரமூலங்கள் ஆகியவை.[1]

சமீபத்தில் நான், ஒரு பெண்மணி சபையின் திட்ட நிகழ்ச்சிகளில் தனது கணவரின் ஈடுபாடு பற்றி விமர்சித்ததைக் கேள்விப்பட்டேன். அவர் கிறிஸ்தவச் சூழ்நிலையில் வளர்ந்திருக்கவில்லை என்று கூறியதன் மூலம் அப்பெண்மணி தனது கணவரின் ஈடுபாட்டை விளக்கியுரைத்தார். அவர் வயது வந்தவரானபோதுதான் சுவிசேஷத்தையும் கிறிஸ்தவர்களின் உள்ளூர் சபைக்குழுமம் ஒன்றையும் கண்டறிந்தார். கிறிஸ்தவ வாழ்வை, அவர் ஒருக்காலும் எளிதாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதால் அது அவருக்கு விசேஷித்த விஷயமாக அர்த்தப்பட்டது! பவுலின் மொழிநடையைப் பயன்படுத்துவதென்றால், அந்த மனிதர் பொக்கிஷத்தைக் கண்டறிந்திருந்தார். சபையின் பல பிரச்சனைகள், நமக்குப் பொதுவானவைகள் ஆகியுள்ளன என்பதே நமது அணுகுமுறையின் பிரச்சனையாக உள்ளது. நீண்ட காலமாகப் பொக்கிஷம் ஒன்றைக் கொண்டவர்களாக வாழ்பவர்கள், அதன் உண்மையான மதிப்பை மறந்து போகலாம். அதைப் புதிதாகக் காண்கிறவர்கள் அடிக்கடி, தங்கள் வாழ்விற்கு அதன் மதிப்பை உணர்ந்து அறிகின்றனர்.

## மண்பாண்டங்களில்

பொக்கிஷம் வைக்கப்பட்டுள்ள மண்பாண்டம் என்பது, தமது பலவீனங்கள், பூரணப்படாத தன்மைகள் மற்றும் வலுவற்றதன்மை ஆகியவற்றுடனான கிறிஸ்தவ ஊழியக்காரர் என்பது தெளிவு. தேவன் தமது பொக்கிஷங்களை ஒரு கோட்டைக்குள் அல்லது மிகவலிவும் மிகவும் பாதுகாப்பும் உள்ள கண்ணாடி உறைக்குள் வைக்கத் தேர்ந்துகொள்ளவில்லை. தேவனுடைய பொக்கிஷம், வலிவற்ற மண்பாண்டங்களுக்குள் வைக்கப்பட்டது.

மண்பாண்டத்தின் உருவகம் நமது சொந்த பலவீனங்களை நமக்கு நினைவூட்டுவதற்காக வேதாகமத்தில் அடிக்கடி பயன்படுத்தப்படும் அளவுக்கு,

*நமது வலிவற்ற வாழ்வுகளுக்கு மிகவும் ஏற்புடையதாக உள்ளது. சங்கீதக்காரர், "உடைந்த பாத்திரத்தைப்போலானேன்" என்று கூறுகிறார் (சங்கீதம் 31:12). எரேமியா ஒரு மனிதரை, "அவமதிக்கப்பட்ட, உடைந்த, ஒருவரும் விரும்பாத பாத்திரம்" என்று விவரிக்கிறார் (எரேமியா 22:28). ஆனால் நமது வாழ்வுகள் மண்பாண்டத்தைப் போன்று நலிவுற்றவையாக இருந்தாலும், தேவன் அந்த நலிவுற்ற பாத்திரத்தை நற்பயன்பாட்டிற்கென்று வைக்க முடியும் என்று தீர்க்கதரிசிகள் நமக்கு முறையாக நினைவூட்டுகின்றனர். தேவன் களிமண்ணை வனைந்து தமது சொந்த நோக்கங்களுக்கென்று அதைப் பயன்படுத்துகிறார் (எரேமியா 18:1-11; cf. ஏசாயா 29:16; 45:9). களிமண் தனது பலவீனத்தில், பானை வனைபவரின் மனவிருப்பத்தை எதிர்த்து நிற்க உரிமை கொண்டிருப்பதில்லை (cf. ரோமர் 9:19, 20), ஏனெனில் அவர் மதிப்பற்ற களிமண்ணை எடுத்து அதைத் தமது கருவியாகப் பயன்படுத்த முடியும்.*

*"இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" என்ற பவுலின் கூற்றானது, நாம் அதன் மூல சந்தர்ப்பப்பொருளை சுலபமாக மறந்துபோகுமளவுக்கு மிகவும் விரிவானதாக உள்ளது. பவுல், தேள்போல கொட்டுகிற விமர்சனத்தின் இலக்காக இருந்திராவிட்டால், அவர் அனேகமாக இந்த விளக்கத்தை ஏற்படுத்தியிருக்கமாட்டார். அவரது எதிராளிகள், அவர் நம்பகத்தக்க ஊழியராக இருப்பதற்கு மிகவும் பலவீனமாக இருந்தார் என்ற அடிப்படையில் அவரது நம்பகத்தன்மையைப் பற்றிக் கேள்வி எழுப்பினர். அவர்கள், "அவனுடைய நிருபங்கள் பாரயோசனையும் பலமுமுள்ளவைகள்; சரீரத்தின் தோற்றமோ பலவீனமும், வசனம் அற்பமுமாயிருக்கிறது" என்று கூறினார்கள் (10:10). இது அவர்கள், "பொது இடங்களில் பேசும் பேச்சாளர்களைப்போல் மின்னல் போன்ற உரைநிகழ்த்தும் பேச்சாளரை நாங்கள் எதிர்பார்த்தோம்" என்று கூறியதுபோலிருந்தது. ஒருவேளை அவர்கள், "வனப்புவாய்ந்த தேவனைப்போன்றுள்ள, ஒலிம்பிக் விளையாட்டுகளில் கலந்துகொள்ளும் வீரர்கள் போன்ற ஒருவரை நாங்கள் எதிர்பார்த்தோம்" என்று கூறியிருக்கலாம். தேவனுடைய வசனத்தை அறிவிப்பவராகிய பவுல், அறிவுஜீவிகளான கொரிந்தியர்கள் ஒரு நடத்துனருக்குள் எதிர்பார்த்திருந்த தன்மைகளைக் கொண்டிருத்தல் கடினமாயிருந்தது. தேவன் தமது பொக்கிஷத்தை, பலம்நிறைந்த மற்றும் கறைதிரையற்ற பாத்திரங்களில் அல்ல, ஆனால் நலிவுற்ற மண்பாண்டங்களில் வைப்பதென்பதை வேண்டுமென்றே தேர்ந்து கொண்டார் என்ற நினைவூட்டுதலே அவரது பதிலுரையாக இருந்தது.*

*தேவன் மனிதரின் தர அளவைகளுக்கு ஒத்திருப்பதில்லை என்று கொரிந்தியர்களை நம்பச்செய்வதற்கு முயற்சித்தபோது, பவுல் இதேமாதிரியான விவாதத்தை 1 கொரிந்தியர் நிருபத்தில் ஏற்படுத்தினார். தேவன், வெட்கக்கேடு மற்றும் பலவீனம் ஆகியவற்றின் அடையாளமான சிலுவையின் மூலமாகத் தம்மை உலகமக்கள் அறியச்செய்வதைத் தேர்ந்து கொண்டார். பின்பு பவுல் "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை" என்று கூடுதலாகக் கூறினார் (1 கொரிந்தியர் 1:26). சபைமுழுமையும் "மண் பாண்டங்களால்" - தங்கள் சொந்த பலம் இல்லாத மக்களால் - ஆனதாக இருந்தது. தேவன் தமது ஊழியத்தைச் செய்வதற்கு அவருக்கு ஞானமும், பலம் நிறைவும் மற்றும் மேன்மையும் கொண்டவர்கள்*

தேவைப்படவில்லை.

தேவனுடைய பொக்கிஷம் "மண்பாண்டங்களில்" வைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் மறந்து போனால், சபைக்கு நாம் தீவிரமான பிரச்சனைகளை உருவாக்குகிறோம். நமது கலாச்சாரத்தில் ஒவ்வொரு வகையான ஊடக நட்சத்திரங்களுக்குமான அதன் மேன்மையுடன், "உயர்நட்சத்திரங்கள்" முக்கிய மான பணிகளுக்கு அவசியமாயிருக்கின்றனர் என்ற கண்ணோட்டத்தினால் நாம் பெருமளவு நிரப்பப்பட்டிருக்கிறோம். சமீபத்திய ஆண்டுகளில், பிரதான சுவிசேஷத்துவ இயக்கம் ஒன்று, மாயக்கவர்ச்சிகொண்ட ஊடக நட்சத்திரங்கள் விசுவாசத்தை ஏற்றுக்கொண்டனர் என்று காண்பித்தலின் விசேஷ சுட்டிக்காட்டுதலை ஏற்படுத்தியுள்ளது. அசாதாரண திறமை இருத்தல் என்பது விசுவாசத்திற்கு நம்பகத்தன்மைக் கொடுக்கிறது என்ற யூகம் இருப்பதாகக் காணப்படுகிறது.

தேவன் தமது பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் வைக்கத் தேர்ந்துகொண்டார் என்பதை நாம் மறந்துபோனால், நம்மை நடத்துகிறவர்கள்மீதான பொறுமையை நாம் இழந்துபோகிறோம். நாம், மூப்பர்களின் "திறமையின்மையை" அல்லது ஊழியக்காரரின் பிரசங்கத்தி னுடைய இரண்டாந்தரத் தன்மையை அடையாளப்படுத்தத் துரிதப்பட்டு, பின்பு சபையின் ஒவ்வொரு ஆராதனையும் தொலைக்காட்சிச் சிறப்பு நிகழ்ச்சி போலவே மினுக்குள்ளதாக இருந்தால்தான் சபையின் எதிர்காலம் உயர்வடையும் என்று முடிவு செய்கிறோம். உண்மையான "நட்சத்திர" தகுதியுள்ள யாரேனும் ஒருவரை நாம் கண்டறிந்தால்தான் சபையானது ஆரோக்கியமாயிருக்க முடியும் என்று நாம் முடிவுசெய்கிறோம்.

ஒருமுறை, சபைக்குழுமம் ஒன்றின் பல உறுப்பினர்கள், தங்கள் ஊழியக்காரர் தமது பணியைத்துறக்க வேண்டும் என்ற அளவுக்கு அவர் "மிகவும் சராசரியானவராக" இருந்தார் என்று முறையிட்டனர், ஏனெனில் அவரே சபையின் தோல்விகளுக்குக் காரணமாயிருந்தார் என்று அவர்கள் நினைத்தனர். ஞானமுள்ள ஒரு உறுப்பினர், "ஆம், ஆனால் நாம் ஒரு 'சராசரியான' சபையாக இருக்கிறோம்" என்று பதில் அளித்தார். பெரும்பான்மையான சபைக்குழுமங்கள் இவ்வாறே உள்ளன. திறமையின் அளவு என்பது ஒரு கார்ப்போரேஷனின் அளவு வரை இல்லாதிருக்கலாம். திட்டங்களைச் செயல்படுத்துதலில் விரும்பத்தக்க திறனில் குறைவு இருக்கலாம், மற்றும் பணியாளர்கள் மற்றவர்களுக்கு எதிராக நன்கு அளவிடப்படாதிருக்கலாம். ஆனால் நான், பவுலின் வார்த்தைகள் தீவிரமான வையாக எடுத்துக்கொள்ளப்பட்டால், சபைமுழுவதும் உடையக்கூடிய பாண்டங்களால் ஆனது என்பதை நினைவுக்குக் கொண்டுவருவோம் என்று நம்புகிறேன்.

இந்தப் புரிந்துணருதல் நமக்கு, மற்றவர்களிடத்தில் உள்ளதாக நாம் மனதளவில் உணரும் குறைகளுக்குப் பொறுமையை நமக்குக் கொடுக்க வேண்டும். நடைமுறையில் தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொள்ளும் யாவரும் தாங்கள் வருத்தப்படும் வகையிலான தீவிரமான தவறுகளைச் செய்கின்றனர். நமது முடிவுகளின் விளைவுகளை முன்னெதிர் நோக்குவதற்குப் போதுமான முன்கண்ணோட்டத்தில் நாம் குறைவுபடுகிறோம். நாம், சிந்தித்துப் பார்க்கையில் அவற்றை நாம் தவிர்த்திருக்க வேண்டும் என்று கருதக்கூடிய எச்சரிக்கையற்ற விளக்கங்களை ஏற்படுத்தியுள்ளோம். "மண்பாண்டங்களான"

சமுதாயமாக இருத்தல் என்பது மனிதத் தவறுகள் சிலவற்றை உள்ளடக்குவதாக இருக்கிறது. இந்த உண்மையை நினைவுக்குக் கொண்டுவரும் சபையானது பொறுமையைச் செயல்படுத்தும்.

நாம் "மண்பாண்டங்களான" சமுதாயமாக இருப்பதால், ஒழுக்கரீதியாக தீவிரமான குற்றங்களைச் செய்துள்ளவர்களிடத்தில் நமது பொறுமைக்கான இடம் ஒன்றும் உள்ளது. தொலைதூரக் கடந்த காலத்தில் தூரத்தில் கிடக்கிற தவறு ஒன்றை ஒருக்காலும் மறக்காத ஆவியொன்று உள்ளது. அந்தக் குற்ற மானது மற்றவரை எந்த நிகழ்ச்சியிலும் எக்காலத்திலும் பங்கேற்கும் தகுதியை இழந்தவராக்குகிறது என்பது போன்று நாம் செயல்படக்கூடும். ஆனால் அப்படிப்பட்ட ஆவியானது, தீவிரமான குற்றங்களைச் செய்துள்ளவர்களைத் தேவன் தம்மால் "தேர்ந்துகொள்ளப்பட்ட கருவிகளாக" பயன்படுத்த முடியும் என்ற உண்மையைப் புறக்கணிக்கிறது. அவர் சபையைத் துன்புறுத்தி இருந்த ஒருவரைக் கூடப் பயன்படுத்தினார்.

தேவன் "மண்பாண்டங்களை" பயன்படுத்தத் தேர்ந்துகொண்டுள்ளார் என்ற உண்மை, பணிக்கென்று நம்மை முற்றிலுமாக ஒப்புக்கொடுக்க முயற்சி ஏற்படுத்தாமலேயே நாம் நமது இயலாமை மற்றும் தோல்வியை ஒப்புக்கொள்கிறோம் என்று சுட்டிக்காட்டுவதில்லை. தேவன் தவறுசெய்த மக்களைத் தமது கருவிகளாகத் தேர்ந்துகொண்டுள்ளார் என்பதால், நம்மிடம் அவர் வலிவார்ந்த உறுதிப்பாட்டையும் நாம் அளிக்க வேண்டிய மிகச்சிறந்தவற்றையும் வற்புறுத்திக் கேட்பதில்லை என்று யூகித்தலானது, பவுலின் செய்தியை திரித்துக் கூறுதலாயிருக்கும். நம்பகத்தன்மைவாய்ந்த ஊழியமானது, தேவன் நம்மைப் போன்று உடைந்த பாண்டங்களைப் பயன்படுத்த முடியும் என்று அறிதலின் பாதுகாப்பை உள்ளடக்குகிறது, ஆனால் இது, நாம் நமது வரையறைகளைத் தன்னிறைவுடன் ஏற்றுக்கொண்டு முன்னேறுவதற்கு எவ்வித முயற்சியுமின்றி இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை. இரண்டாந்தர மான பேச்சாளரையும் நிர்வாகம் செய்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் ஆகியவற்றில் விசேஷித்த திறமை இல்லாதவரையும் தேவன் பயன்படுத்த முடியும் என்பது உண்மையாகவே உள்ளது. ஆனால் பொக்கிஷம் ஒன்றை நாம் கொண்டுள்ளோம் என்று உணர்ந்தறிதலானது, நாம் உணர்வற்றும் தன்னிறைவு கொண்டும் இருப்பதில் இருந்து நம்மை விலக்கிக் காக்கிறது.

## வல்லமை தேவனுக்குரியது என்று காண்பிக்க

தேவனுக்கு ஊழியம் செய்வதற்கு "உயர்நட்சத்திரங்கள்" மாத்திரமே திறன்கொண்டிருந்தனர் என்றால், வல்லமையின் ஆதாரமூலத்தை நாம் தவறாக எடுத்துக்கொள்வோம். ஆனால் தேவன் மண்பாண்டங்களின் மூல மாகப் பணிசெய்கிறார் என்றால், வல்லமை அவருடையதே என்பது தெளிவு. "வல்லமை" (*dynamis*) என்ற வார்த்தை, 1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்களில் அடிக்கடி காணக்கிடக்கிறது (cf. 1 கொரிந்தியர் 1:18, 24; 2:5; 2 கொரிந்தியர் 12:9; 13:4), ஒருவேளை இது, அசாதாரண விஷயங்களைச் செய்வதற்குத் தங்கள் சொந்த வல்லமையை மேன்மைப்படுத்தியிருந்த மனிதர்களுக்கு பதிலு ரையாக இருந்திருக்கலாம். தேவன் தமது பலத்தை மனித பலவீனங்களில் காட்சிப்படுத்துவதைத் தேர்ந்துகொண்டுள்ளார் என்று பவுல் தமது சகோதர சகோதரிகளுக்கு முறைப்படி நினைவூட்டுகிறார் (12:9; 13:4), என்றால்

தேவனுடைய வல்லமை தவறுகாணப்பட இயலாததாக உள்ளது. சிலுவையின் பலவீனத்தில்தான் தேவனுடைய வல்லமை மிகவும் தெளிவாக இருந்தது.

ஜேம்ஸ் S. ஸ்டீவார்ட் என்பவர், இங்கிலாந்தின் பர்மிங்ஹாம் என்ற இடத்தில் D. L. மூடி என்பவரின் ஊழியம்பற்றிக் கூறியிருக்கிறார். மூடி ஒரு ஊழிய முகாமில் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, தேவநம்பிக்கையற்ற ஒருவர் ஒவ்வொரு இரவும் அந்தக் கூட்டங்களுக்கு வந்து, சுவிசேஷகர் பயன்படுத்திய முறைமைகளை விமர்சிக்கும் கண்கொண்டு கவனித்தார். கடைசியில் அவர் மூடியிடத்தில் சென்று, "உங்களின் இந்த ஊழியத்தை நான் கண்டிருக்கிறேன், மற்றும் இது உண்மையிலேயே தேவனுடையது என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். ஏன் என்று நான் உங்களுக்குக் கூறுவேன். உங்கள் தனிப்பட்ட சொந்த விஷயங்களுக்கும் உங்கள் ஊழியம் சாதிக்கும் விளைவுகளுக்கும் இடையில் சாத்தியப்பட்ட உறவு எதையும் நான் காண முடியவில்லை. ஆகவே இது தேவனிடத்தில் இருந்து வந்திருக்க வேண்டும்!" என்று கூறினார்.[2]

நம்மிடத்தில் பலவீனங்கள் இருந்தாலும் என்றல்ல ஆனால் நமது பலவீனங்களின் காரணமாகத் தேவன் நம்மைப் பயன்படுத்த முடியும் என்று பவுல் கருத்து தெரிவித்தார். பவுலின் செய்தியை நாம் தீவிரமானதாக எடுத்துக்கொண்டால், பலம் என்பது பற்றிய உலகத் தர அளவையினால் நாம் தொற்றப்பட்டிருத்தல் மற்றும் நமது சொந்த ஆதாரமூலநிறைவைக் கொண்டு இராஜ்யத்தைக் கட்டி எழுப்ப முயற்சி செய்தல் என்ற தனிப்பட்ட அபாயத்தில் இருப்பதாகக் கண்டறியச் சாத்தியக்கூறு உள்ளது. பவுலின் விரோதிகள் தங்கள் சொந்த வரங்களைப்பற்றித் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருத்தலில் அவர்களால் இந்தத் தவறு செய்யப்பட்டிருந்தது. நம்பகத்தன்மை வாய்ந்த ஊழியமானது, தேவன் தமது மகிமைக்கென்று நம்மைப் பயன்படுத்தக்கூடிய உருவாக்கும் பானைவனைபவர் என்று நாம் ஒப்புக்கொள்ளுதலை உள்ளடக்குகிறது.

## கீழே தள்ளப்பட்டுள்ளோம், ஆனாலும் அழிக்கப்பட வில்லை (4:8-15)

4:8, 9ல் உள்ள கவிதைத்துவமான வரிகளில், பவுல் உடையக்கூடிய ஒரு பாண்டமாக இருக்கிறார் என்ற விஷயம் தெளிவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவரது வாழ்வு ஒரு மண்பாண்டம் என்ற வகையிலானது என்பதை, நான்கு இணைச் சொற்றொடர்கள் விவரிக்கின்றன. ஒவ்வொரு சொற்றொடரின் முதல் பாதியிலும், அவர் தமது நலிவுற்ற நிலையை விவரிக்கிறார். அவர், "நெருக்கப்பட்டு," "கலக்கமடைந்து," "துன்பப்படுத்தப்பட்டு," மற்றும் "கீழே தள்ளப்பட்டு" இருக்கிறார். இவ்வார்த்தைகள், தம்மை நசுக்குகிற சக்திகளுக்கு எதிராகத் தற்காத்துக்கொள்ள வல்லமையற்ற நிலையில் இருக்கும் ஒருவரைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கின்றன. அவர் தமது சொந்தத்தில் எவ்வித ஆதாரமூலத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதை உணர்ந்து அறிகிறார். இந்தச் சொற்றொடர்கள், பவுல் தம்மை நம்பிக்கைக்குரிய சீஷர் என்று "பாராட்டுகிற" அந்த உபத்திரவங்களைப் பட்டியலிட்ட மற்ற வசனங்களைப் போன்றவையாக உள்ளன (6:4-6; 11:23-29). அவர் தமது குறிப்பிடத்தக்க வல்லமைகளுக்காக அல்ல ஆனால் தமது பலவீனங்களுக்காகவே அறியப்பட்டிருக்கிறார்.

*பவுல் தமது பல சோதனைகளை வலியுறுத்துதல் என்பதைத் தமது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, ஏனெனில் தமது ஊழியத்தில் பெற்ற துன்பத்தைக் குறிப்பிடும் ஒவ்வொரு வேளையிலும், அவர் "ஆனால் ... இல்லை" என்ற சொற்றொடரைப் பின்கூறுகிறார். அதாவது, அவர் உதவியற்றவராக இருந்துள்ளார், ஆனால் ஒருக்காலும் தோல்வி யடைந்ததில்லை. ஆதாரமூலங்களில் அவர் குறைவுபட்டிருந்தாலும், அவர் ஒருக்காலும் தோற்கடிக்கப்பட்டதில்லை. அவர் மிகவும் உதவியற்றவராகக் காணப்பட்டிருந்தபோது தம்மைத் தேவன் காப்பாற்றிய வேளைகள் பற்றிய குறிப்பிட்ட உதாரணங்களை நினைவுகூர்ந்தார் (cf. 1:8-11). பவுல், "எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை" என்ற அவரது கூற்றானது, உபத்திரவங்களில் நீடிய பொறுமையாயிருத்தலுக்கான எண்ணற்ற குறிப்புகளை நமக்கு நினைவூட்டுகிறது (1:4, 8; 2:4; 4:17; 6:4). "நெருக்கப்படுதல்" என்பதற்கான (thlipsis என்ற) வார்த்தையானது "நெருக்கி செயலற்றவர் ஆக்கப்படுதல்" அல்லது அவர் "நசுக்கப்பட்டுப் போகும்" அளவுக்கு மிகவும் கடினமாக "அழுத்தல்" என்ற அர்த்தம் தருகிறது. NIV வேதாகமம் இவ்வசனத்தை ஏற்புடைய வகையில் தரவழைக்கிறது: "நாங்கள் எல்லாப் பக்கத்திலும் கடின மாக அழுத்தப்படுகிறோம், ஆனால் நசுக்கப்படுவதில்லை." வேதனை இல்லாதி ருத்தல் என்பதல்ல, ஆனால் அதினால் அழிக்கப்படாதிருக்கிறார் என்ற உண்மையே கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது.*

*மேலும் பவுல், "மனமுறிவடைகிறதில்லை," "கைவிடப்படுகிறதில்லை" மற்றும் "மடிந்துபோகிறதில்லை" (1:8) என்ற நிலையிலும் இருக்கிறார், ஆனால் அவர் விட்டொழித்து விட்டார் என்ற கருத்தில் இவ்வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை. மற்றவர்கள் நம்மைக் கைவிடுகையில் (2 தீமோத் தேயு 4:10, 16) தேவன் நம்மைக் கைவிடாதிருக்கிறார் என்ற உறுதிப்பாட்டை அவர் வேதாகமத்தின் மற்ற எழுத்தாளர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். தேவன், "நான் உன்னைவிட்டு விலகுவதில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்று கூறுகிறார் (எபிரேயர் 13:5). நாம், "மண்பாண்டங்கள்" என்ற வகையில் பலமுறைகள் "கீழே தள்ளப்படுகிறோம்" என்று அவர் அறிந்தார். நாம் நமது ஊழியத்தில் எண்ணற்ற தாக்குதல்களுக்குப் பலியானவர்களாக இருக்கிறோம். ஆனால் நாம் "மடிந்துபோகிறதில்லை." பிலிப்ஸ் என்பவர் 4:8ன் கடைசிச் சொற்றொடரை, "கீழே தள்ளப்படுகிறோம், ஆனால் அழிக்கப்படவில்லை" என்று தரவழைக்கிறார். எனவே நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவமானது, நம்பிக்கையுடன் கூறும் ஆவியானவரால் அடையாளப்படுத்தப்படுகிறது, "ஆனால் இல்லை" - ஒடுங்கிப்போவதில்லை, மனமுறிவடைகிறதில்லை, கைவிடப்படுகிறதில்லை மற்றும் மடிந்துபோகிறதில்லை. இந்த "ஆனால் இல்லை" என்பது, தேவனுடைய மண்பாண்டங்களில் அவரது வல்லமை கிரியை செய்கிறது என்ற நமது உறுதிப்பாட்டில் இருந்து வளருகிறது.*

*பவுலுக்கு ஏற்பட்ட உபத்திரவங்கள் அவரை, கிறிஸ்துவின் உண்மை யான ஊழியர் என்று "பாராட்டுகின்றன" என்பது பவுலின் நினைவூட்டுதலாக உள்ளதென்பது, 2 கொரிந்தியர் நிருபத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாக உள்ளது (6:4; 11:23-29; 12:8-11). பவுலின் பலவீனம், அவர் "இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் [தமது] சரீரத்தில் சுமந்து திரிகி[றார்]" என்று செயல் விளக்கப்படுத்துகிறது என்று அவர் கூறுகிறார் (4:10),*

*ஏனெனில் இயேசுதாமேகூட, துன்புறுத்தப்பட்ட மற்றும் கீழே தள்ளப்பட்ட மனிதராகத் தற்காப்பு எதுவுமின்றி இருந்திருந்தார். இயேசுவின் விரோதிகளைப் பொறுத்தமட்டில், அவர் பலவீனமானவராக ஏளனம்பண்ணப்பட்டவராக இருந்தார். பவுலின் கூற்றுப்படி அவர் (இயேசு), "பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்[தார்]" (13:4). இயேசுவின் ஊழியக்காரர்களைப் போலவே அவரும் வேதனையை அனுபவத்து மரித்த ஒரு "உடையக்கூடிய பாண்டமாக" இருந்திருந்தார். நம்பகத்தன்மையுள்ள கிறிஸ்தவரின் வேதனையும் பலவீனமும் இயேசுவின் முடிவுல் பங்கேற்பதாக உள்ளன. பவுல் இயேசுவின் பாடுகளில் தமது பங்கேற்பைப் பற்றி அடிக்கடி பேசுகிறார் (பிலிப்பியர் 3:10; கலாத்தியர் 2:20; 6:17).*

*ஊழியக்காரரின் பலவீனம் மற்றும் வலுவற்ற தன்மையில் வெட்கக்கேடு எதுவுமில்லை என்று பவுல் கூறுவதாகக் காணப்படுகிறது. பவுல் தமது பலவீனங்கள் பலவற்றுடன், ஒரு தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக்கொண்டிருக்க முடியும். அவருடனான ஒப்பீட்டில் சிலர் "நட்சத்திரங்கள்" போலிருந்தனர். ஆனால் இயேசுதாமே வலுவற்றவராக இருந்தார் என்பதைப் பவுல் நினைவுகூருகிறார். எருசலேமில் இருந்த பலரின் கண்களுக்கு, இயேசு மிகச் சாதாரணமானவராக இருந்தார். அவரை ஏளனம் செய்த போர்வீரர்கள் அவருக்குள் விசேஷித்த வல் லமை அல்லது மகிமையைக் கண்டிருக்கவில்லை.*

*ரஷ்யா நாட்டின் மாபெரும் எழுத்தாளரான இவான் துர்கெனேவ் என்பவர், இயேசுவின் மனிதத்தன்மையைத் தாம் புரிந்தகொள்ள வந்த ஒரு தரிசனத்தை விவரித்தார்:*

> *தாழ்வாகக் கூடாரமிடப்பட்டிருந்த மரத்தினால் ஆன சபைகூடுமிடம் ஒன்றில், ஏறக்குறைய ஒரு பையனாக இருந்த ஒரு இளைஞனை நானே பார்த்தேன். எனக்கு முன்னால், வனப்பு வாய்ந்த முடியமைப்புக் கொண்ட குடியானவர்கள் பலர் நின்றிருந்தனர். அவர்கள், முற்றிய கோதுமைக் கதிரின்மீது கோடைகாலக் காற்று கடந்துசெல்லும்போது அக்கதிர்கள் செய்வதுபோன்று, அவ்வப்போது, அலைந்தாடிக்கொண்டு, விழுந்துகொண்டு, மீண்டும் எழுந்துகொண்டு இருந்தனர். திடீரென்று ஒரு மனிதர் பின்னாலிருந்து வந்து என்னருகில் நின்றார். நான் அவரிடம் திரும்பவில்லை, ஆனால் அந்த மனிதர் கிறிஸ்துதான் என்று நான் உணர்ந்தேன். உணர்வும், விநோதப்பிரியமும் என்னை ஆட்கொண்டன. நான் முயற்சிசெய்து எனது அருகில் இருந்தவரைப் பார்த்தேன். அது மற்ற ஒவ்வொருவருடைய முகம்போல், எல்லா மனிதர்களின் முகங்கள் போல் இருந்தது. "இவர் எவ்வகையான கிறிஸ்துவாக இருக்கிறார்?" என்று நான் நினைத்தேன். அவர் அப்படிப்பட்ட சாதாரண, சாதாரண மனிதராக இருந்தார். அவ்வாறு இருக்க முடியாது.*

*கிறிஸ்துவின் முகம் மற்ற எல்லா மனிதர்களின் முகம்போன்றே இருந்தது என்பதை அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. தேவன், கற்களை அப்பங்களாக மாற்றிய, தேவாலயங்களில் இருந்து குதித்த, அல்லது பின்பற்றும்படி மக்களை நிர்ப்பந்தம் செய்த ஒரு "சக்திமான்" மூலமாக அல்ல, ஆனால் ஒரு மனிதர் - ஒரு மண்பாண்டம் - மூலமாகப் பேசுவதைத்*

*தேர்ந்துகொண்டார் என்பதே, திரு அவதாரம் பற்றிய ஆச்சரியமாக உள்ளது.*

*இயேசு தமது மாபெரும்தன்மையை விட்டு, "தம்மையே வெறுமை யாக்குவதை" தேர்ந்துகொண்டு, ஒரு கருத்தில் சாதாரணமானவராவதைத் தேர்ந்துகொண்டார் (பிலிப்பியர் 2:7) என்பதை நாம் ஒப்புக்கொள்வது அவசிய மாக உள்ளது. அப்போது நாம், பலவீனத்தின் பிரசன்னத்தில் தேவனுடைய வல்லமை செயல்விளக்கப்பட்டதான உயிர்தெழுதலின் மகிமையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க முடியும். பவுல் வலுவற்றவராக இருக்கும்போதுதான், தேவனுடைய "ஜீவனான" அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை (4:11) தமது வாழ்வில் பிரசன்னமாகியிருக்க முடியும் என்று அறிகிறார். பவுலின் சீரான "ஆனால் இல்லை" என்பது, கிறிஸ்துவின் பலவீனத்தில் பங்கேற்பவர்கள் யாவரும் அவரது பலத்திலும் பங்கேற்கின்றனர் என்பதை அறிந்துள்ள ஒருவரின் நம்பிக்கை மிகுந்த வார்த்தையாக உள்ளது. பிற்பாடு பவுல் கூறுகிறபடி, "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (12:10).*

## *முடிவுரை*

*நகரத்தில் உள்ள மிகவும் செல்வாக்குடைய மக்களை நமது நண்பர்களாகப் பெறுதல், அல்லது மிகவும் திறன்வாய்ந்த ஊழியர்களைக் கொண்டிருத்தல் அல்லது மிகச்சிறந்த துறவல்லுனர்களைக் கொண்டிருத்தல் என்பவை, நமது ஊழியங்களில் தேவனுடைய வல்லமையைக் கண்டறிவதற்கான முன்தகுதி யாக இருப்பதில்லை, ஏனெனில் அப்போது நாம் நமது வல்லமையைக் காட்சிப்படுத்துபவர்களாக இருக்கலாம். அரசியல் பலத்தைப் பயன்படுத்துதல் என்பது கிறிஸ்தவரின் அடையாளமாக இருப்பதில்லை, ஏனெனில் அதிலும் பலம் என்பது நம்முடையதாகவே இருக்கும். நம்மை நாம் இடர்பாட்டிற்குள்ளாக்கி நாம் மண்பாண்டங்கள் என்று ஒப்புக்கொள்வதில்தான் தேவனுடைய வல்லமை பிரசன்னமாகிறது. தேவனுடைய வல்லமையானது, தமது விரோதி களின் கைகளில் தற்காப்பற்றவராக மரித்த மனிதரின் அனுபவத்தில் மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.*

---

குறிப்புகள

[1]James S. Stewart, *The Wind of the Spirit* (Nashville: Abingdon Press, 1975), 19. [2]Ibid., 23.